1969 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, அந்தந்தக் கிளை நூலகங்களினுடைய அதிகாரம் பெற்ற மன்றங்களின் மூலமாகத்தான் நூல்கள் வாங்கப்படுகின்றன. பல நூலகங்களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வப்போது வெளி வருகின்ற நூல்களைப் பொறுத்து, அவர்களே தேர்ந்தெடுக்கும் முறை அமைந்திருக்கிறது. அப்படி வைக்கக் கூடாது என்ற தடை ஏதும் இல்லை. ஆங்காங்கு இருக்கும் கிளை நூலகங்களை நடத்துவதற்குப் பொறுப்பாக உள்ள மன்றங்கள் மூலம் நூல்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன. பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்களும் வைக்கப்பட்டிருக்கின்றன.

THIRU K. VINAYAKAM : Sir, with regard to the books written by our late Chief Minister, are the Government aware of the fact that many books written by him in his school days were banned by the then Government in those days. Now, will the present Government consider the question of removing the ban on those books . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

மதுராந்தகத்தில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி

*** 235 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகத்தில் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, மதுராந்தகம் நகரத்தில் இருக்கும் ஒரே ஒரு உயர்நிலைப்பள்ளி தனியார் உயர்நிலைப் பள்ளியாகும். அங்கே ஒரு பெண்கள் உயர் நிலைப்பள்ளி ஏற்படுத்த வேண்டுமானல், அதற்கு நிலம் தேவை என்று சர்க்கார் கேட்கிறார்கள். நகரத்திற்குள்ளே நிலம் இல்லை ; ஏறக்குறைய இரண்டு மைலுக்கு அப்பால்தான் நிலம் தரும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நகரத்தில் குறைந்த அளவுக்கு நிலம் கொடுத்தாலும் அங்கே பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உயர்நிலைப்பள்ளி வைக்கப்படுவதற்கு சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து மைல் சுற்றுவட்டாரத்தில் வேறொரு உயர்நிலைப்பள்ளி இருக்கக் கூடாது என்றும், அதற்கு ஐந்து ஏக்கர் நிலம் இருக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மதுராந்தகத்தில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைக்க வேண்டும் என்று

[1969 செப்டம்பர் 12

விண்ணப்பம் ஏதும் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. 1968-69-ம் ஆண்டில் மாம்பாக்கத்தில் இருந்து ஒரு விண்ணப்பம் வந்தது. ஆனால், மாம்பாக்கத்தில் உயர்நிலைப்பள்ளிக்கு இருக்க வேண்டிய போதுமான எண்ணிக்கை மாணவர்கள் இல்லாத காரணத்தால், அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

Vidwan Examination in Telugu.

* 236. *Q.*—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) Whether there is any proposal to request the University of Madras to constitute "Vidwan Examination" course in Telugu with a view to overcome the dearth of Telugu pandits in high schools of our State and also to encourage and develop Telugu; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Thiru K. S. KOTHANDARAMIAH : There is great dearth of Telugu pandits in high schools in Madras State. In Hosur taluk, for 14 high schools, we have only 3 Telugu Pandits and two are about to retire. Secondary-grade teachers are allowed to teach and they are not able to teach. The standard is going down. Previously Vidwan examination was being conducted by Madras University for Telugu also. I myself have passed that examination from this University. Not only was that examination attractive and useful; it was also ideal. To remove the present dearth of Telugu Pandits, will the Government start a training school and revive the Telugu Vidwan examination so that Telugu students could be helped?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது தெலுங்குப் பண்டிதர்களைப் பொறுத்து பற்றாக்குறை இருப்பதாகத் தெரியவில்லை. நமக்குத் தேவையாக இருந்தாலும் வெங்கடேசுவரா பல்கலைக் கழகம், ஆந்திராப் பல்கலைக் கழகம் இங்கே படித்து தெலுங்கு வித்வான் பட்டம் பெற்றவர்களை நியமித்துக் கொள்ள அரசு ஆயத்தமாக இருக்கிறது. ஆகவே, நாம் தனியாக ஒரு பள்ளியை ஏற்படுத்தி ஆண்டுதோறும் தெலுங்கு பண்டிதர்களை உண்டாக்க வேண்டிய நிலை இல்லை. ஆயினும், தனியார் யாராவது பல்கலைக் கழக அனுமதியுடன் ஒரு பள்ளியை ஏற்படுத்த முன்வந்து அரசாங்கத்திடம் நிதி உதவியை நாடினால் அரசாங்கம் அதுபற்றிப் பரிசீலிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : நம் மாநிலத்தில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகளில் தெலுங்குப் பண்டிதர்கள் பணியாற்றி வருகிறார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.